# நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய இதழ்

மகளிர் தினச் சிறப்பிதழ்

குடில்: 1 விருந்து: 7



சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

மார்ச் 2019

நற்றமிழ்க்குடில்
மார்ச் 2019

ஆசிரியர்கள் :கு.பாரதி
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு

வே. குணசேகரி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

இணையாசிரியர்கள் : மு.துர்கா
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு
அ. ஸ்டெல்லாமேரி
அ. பர்ஸானா
ஆ. வள்ளி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

துணையாசிரியர்கள் : மு. சத்யா
முதுகலைத் தமிழ் முதலாமாண்டு
சா. யோகேஸ்வரி
அ. உமா மகேஸ்வரி
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

ஆலோசனைக் குழு : டாக்டர் சேதுகுமணன்
கல்லூரித் தலைவர்

முனைவர் ம. சம்ஷாத்
கல்லூரி முதல்வர்

பேராசிரியர் சே. கண்மணி
தமிழ்த்துறைத் தலைவர்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : சோகா தமிழ்ப்பேரவை
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சென்னை - 600 099.

விலை : ரூ. 10/-

## உள்ளே...

தலையங்கம்

தோழிக்குக் கடிதம்

கவிதைச் சாரல்

மரபுக் கவிதைகள்

சிந்தனைக் குவியல்

கவியரங்கக் கவிதைகள்

கண்ணியம் காக்கும் பெண்ணியம்

அறிவோம் அறிஞர்களை

நூல் அறிவோம்

சொல்லோடு விளையாடு

விடைத்தேடும் விடுகதைகள்

சித்திரச் சிறுகதை

தூரிகைத் தூரல்கள்

# நற்றமிழ்க்குடில்

*மாணவ இலக்கிய இதழ்*

*மகளிர் தினச் சிறப்பிதழ்*

குடில் : 1 விருந்து : 7

*சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு*
*மார்ச் 2019*

# முதல்வர் வாழ்த்து

சில்லென்ற மழைச்சாரல்...
இதமான குளிர் தென்றல்
கொஞ்சும் மழலையின் சிரிப்பு
மனதை வருடும் இசை
குளிர் இரவின் நிசப்தம்
இளங்காலைக் கதிரவனின் வெப்பம்
சிறுபெண்ணின் துள்ளல்
தேர்ந்த தூரிகையின் வண்ணம்
தரும் சுகங்கள்...
தந்தது நற்றமிழ்க்குடில் !!
வளர்க உம்முடைய பணி...
வரவேற்கிறேன் !!! வாழ்த்துகிறேன் !!!
*மகளிர் தின வாழ்த்துகள்!!!*

ம. சம்ஷாத்
கல்லூரி முதல்வர்



# துறைத்தலைவர் வாழ்த்து

இலக்கிய உலகில் இதழியலின் பங்கு இன்றியமையாதது. இதழியல் வழியே தன் எழுத்தாற்றலை வளர்த்து, சமுதாயத்தில் எழுச்சியை ஊட்டிய அறிஞர்கள் பலர். மகாகவி பாரதி, பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் இதழ்களின் மூலம் மக்களிடையே விடுதலை வேட்கையை வளர்த்தனர். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் பகுத்தறிவைப் புகட்டுவதற்கு இதழ்களையே பயன்படுத்தினர். இதழ்கள் இளைய சமுதாயத்தை ஆற்றல் மிக்கவர்களாக மாற்றும் சக்தி படைத்தவை.

தங்களுடைய சிந்தனையை, எழுத்தாற்றலை, பரந்த அறிவினை விரிவு செய்து கொள்ளும் களமாக மாணவர்கள் இதழ்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் உருவானதே "நற்றமிழ்க்குடில்" என்னும் மாணவ இலக்கிய இதழ்.

இவ்விதழின் வழி மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்க வேண்டும் என்பதே நோக்கம். மாணவர்களால் உருவாக்கப் பெற்ற இவ்விதழில் அவர்களின் படைப்புகளான கவிதை, கட்டுரை, சிறுகதை, பொது அறிவு, ஓவியம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. மேலும் கடித இலக்கியம் தற்காலத்தில் அருகிவரும் இலக்கியமாக உள்ளது. "தோழிக்கு" என்ற கடிதத்தின்வழி மாணாக்கியர் கடித இலக்கியத்தைக் கையில் எடுத்துள்ளமை சிறப்பிற்கு உரியதாகும்.

தமிழ்த்துறையின் நீண்ட காலக் கனவு மாணவ இதழ் தொடங்க வேண்டும் என்பது. இந்த ஆண்டு அக்கனவு நினைவாகி, அச்சு இதழாக, மகளிர் தினச் சிறப்பிதழாக வெளிவந்து வெற்றி கண்டிருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. இவ்விதழின் வழி மாணாக்கியர் சிறந்த படைப்பாளர்களாக உயர வேண்டும். சமூக நலனில் அக்கறை கொண்டு உழைக்க வேண்டும். நல்லறிவுமிக்க மாணாக்கிகளை உருவாக்கிய பெருமையை நற்றமிழ்க்குடில் தரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

*மாணவிகளுக்கு மகளிர்தின வாழ்த்துகள்....!!!*

சே. கண்மணி
தமிழ்த்துறைத் தலைவர்

# தலையங்கம்



நற்றமிழ்க்குடில் மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்துதல் என்னும் சிறந்த நோக்கத்தினைக் கொண்டு உருவாக்கப்பட்ட மாணவ இலக்கிய இதழாகும். மாணாக்கியரின் தனித்திறன்களை வெளிக் கொணர்ந்து, மெருகேற்றி, மிளிர வைக்கும் ஒரு மாபெரும் களமாக இவ்விதழ் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது. தமிழ்த்துறை மாணாக்கியரின் முயற்சியால் தொடர்ந்து சிறுபிரதியாக வெளிவந்து கொண்டிருந்த இவ்விதழ் தற்போது அச்சுப் பிரதியாக, மகளிர் தினச் சிறப்பிதழாக வெளிவருகிறது. இவ்வளர்ச்சி 2019ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இவ்விதழுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி.

மாணவர்களின் படைப்புகளான கவிதை, கட்டுரை, ஓவியம், புதிய தகவல்கள் என ஏராளமான படைப்புகள் இவ்விதழில் இடம்பெறுகின்றன. இதனால் மாணவர்களின் படைப்புத்திறன் அதிகரிக்கும். கற்பனை வளம் தூண்டப்படும். பிற மாணவர்களுக்குத் தாமும் படைக்கவேண்டும் என்ற எண்ணம் பிறக்க வழிகோலாகும்.

தமிழ்மொழி மீது மிகுந்த ஆர்வம் ஏற்பட்டு மாணவர்களிடையே இலக்கியத்தோடு ஓர் இணைக்கத்தையும், சமுதாயத்தின் மீது மாணாக்கியரின் கண்ணோட்டத்தையும் அறிய இவ்விதழ் வாய்ப்பளித்து உதவும். மாணாக்கியருக்குக் கருத்துச் சுதந்திரம் அளித்து, தன்னம்பிக்கைக் கொடுத்து, அவர்கள் தனக்கான இலட்சியத்தை இலக்கியத்தின்வழி எடுத்துக்கூற இந்நற்றமிழ்க்குடில் இதழ் மிகவும் உறுதுணையாக அமையும்.

சமுதாயத்தில் மாணவர்களை மதிப்பு மிக்கவர்களாக உருவாக்குவதே கல்வி புகட்டுவதன் முக்கிய நோக்கமாகும். அந்த வகையில் சமுதாயத்தின் மதிப்புமிக்கக் கல்வியைத் தந்ததோடு, எங்களின் தனித்திறன்களைக் கண்டறிந்து, பாராட்டி மகிழும் எங்கள் கல்லூரித் தலைவர் கல்வி வள்ளல் **டாக்டர் சேது குமணன்** அவர்களின் நல்லாசியோடு இந்நற்றமிழ்க்குடில் மாணவ இதழ் தொடங்கப்பட்டது. அவர் தொடர்ந்து தந்த ஊக்கத்தின் காரணமாகவே இன்று இவ்விதழ் அச்சு இதழாக மலர்கின்றது. இந்த மகிழ்ச்சிகரமான தருணத்தில் தமிழ்த்துறை மாணாக்கியரின் சார்பில் எங்கள் கல்லூரித் தலைவருக்கு நன்றி மலர்களைக் காணிக்கையாக்குவதில் நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

நல்ல தலைமை வெற்றியை நோக்கி நடைபோடச் செய்யும். அந்த வகையில் எங்களுக்கு நல்ல தலைமையாய் அமைந்து, கல்வியிலும் தனித்திறன்களிலும் நாங்கள் சிறந்து விளங்கிடத் துணைபுரியும் எங்கள் கல்லூரி முதல்வர் முனைவர் **ம.சம்ஷாத்** அவர்களின் வாழ்த்துக்களும் எங்களை நற்றமிழ்க்குடில் என்னும் வெற்றியை நோக்கி நடைபோடச் செய்கிறது.

ஒவ்வொரு மாணவருக்குள்ளும் பல்வேறு தனித்திறமைகள் புதைந்து கிடக்கின்றன. அவற்றைச் சரியான முறையில் வெளிவரச் செய்து, அதில் நேர்த்தியாகவும் சிறந்தும் விளங்கிட உதவுவதே நல்லாசிரியர்களின் தலைசிறந்த கடனாகும். அத்தகு தனித்திறன்களை எங்களிடையே கண்டறிந்து, அவற்றை எங்களுக்கு உணர்த்தி, அனைத்துச் செயல்பாடுகளிலும் நாங்கள் திறம்படச் செயல்பட வழிக்காட்டும் விழியாக விளங்குபவர் எம் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் **சே.கண்மணி** அவர்கள். அவரின் மனம் நெகிழ தொடர்ந்து வெளிவருவதில் நாங்கள் பெருமிதம் அடைகிறோம்.

தமிழ்த்துறை மாணாக்கியரால் தொடங்கப்பெற்ற நற்றமிழ்க்குடில் இலக்கிய இதழ் இன்று கல்லூரியின் அனைத்து மாணாக்கியரும் பங்குபெறும் அளவிற்கு விரிவடைந்துள்ளது. எனவே கல்லூரியின் அனைத்துத் துறை மாணாக்கியரும் தங்களின் தனித்திறன்களை வெளிப்படுத்தத் தகுந்ததொரு களமாக இவ்விதழைப் பயன்படுத்திக் கொள்வோம்.

கல்லூரியின் அனைத்துத் துறைத் தலைவர்களும் பேராசிரியர்களும் மாணவர்களாகிய எங்களுக்குத் தகுந்த ஆலோசனைகளைத் தந்து ஊக்கப்படுத்தி எங்கள் வளர்ச்சியில் என்றும் துணையாக நிற்க வேண்டும் என்ற வேண்டுகோளோடு நற்றமிழ்க்குடிலின் வாயிலில் நாங்கள்.......

*சாதனைகள் புரிவோம் ! சரித்திரங்கள் படைப்போம் !*
*மகளிர் தின வாழ்த்துகள் !!*

கு. பாரதி
இரண்டாமாண்டு முதுகலைத் தமிழ்

## தோழிக்குக் கடிதம்...

*அன்புள்ள தோழி...*

நான் இங்கு நலம். நீயும் உன் பெற்றோரும் நலமா? இந்த வருடம் எங்கள் கல்லூரியில் கல்லூரித் தினத்தை முன்னிட்டு சிறப்பு விருந்தினராகப் பொதிகைத் தொலைக்காட்சியின் இயக்குனராகப் பணிபுரியும் ஆண்டான் பிரியதர்ஷினி அவர்கள் கலந்து கொண்டார்கள். அவரது உரையாடல் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. வீட்டில் இருந்து வெளிவரத் தயங்கிய காலத்தை விடுத்து இன்று சமூக சேவை மட்டுமின்றி அனைத்துத் துறைகளிலும் பெண்கள் சாதித்துவருகின்றனர்.

மண்ணை ஆள்வது மட்டுமின்றி விண்ணையும் ஆளுகின்றனர். எந்தத் துறையாக இருந்தாலும் அதில் பெண்களின் பங்களிப்புச் சிறப்பாக உள்ளது. பெண்கள் இல்லாமல் எந்தச் சபையும் முழுமை பெறாது என்பதுதான் மறுக்கமுடியாத உண்மை.

தமிழில் பெண்களை வர்ணிக்கும்போது மிகவும் மென்மையான பொருட்களை உவமையாகக் கொண்டு வர்ணிப்பார்கள். ஆனால் என்னைக் கேட்டால் பெண்கள் வல்லினமே, வன்மையாவர்களே, வலிமையானவர்களே. பெண்களுக்குச் சிறந்த உவமையாகக் கண்ணாடியைச் சொல்லமுடியும்.

என்ன! சிரிப்பாக உள்ளதா? ஆமாம் கண்ணாடி தன்முன் தோன்றும் பிம்பத்தை அப்படியே காட்டும். அதுபோலதான் பெண்களும் தன்முன் நிற்பவர் எப்படி நடந்து கொள்கிறார்களோ அவ்வாறே பெண்களும் நடந்துகொள்வார்கள். கொடியவர்கள் முன் வன்மையாகவும், இனியவர்கள் முன் மென்மையாகவும் நடந்துகொள்வார்கள். கொடியவர்களைத் தன் அன்பால் திருத்தும் தன்மை கொண்டவர்களும் பெண்களே.

ஆண்கள் செய்யமுடியாத பல செயல்களைக் கூட இன்று பெண்கள் செய்கின்றனர். உடல் அளவிலும் மனதளவிலும் பெண்களே வலிமை வாய்ந்தவர்கள். அதனால்தான் பெண்களை இரும்பு மலர் என்கிறேன். சில செயல்களை நினைக்கையிலே மெய்சிலிர்க்கிறது. நான் நாள்தோறும் அன்றாட வாழ்வில் சில பெண்களைச் சந்திக்கிறேன் அவர்கள் கடிகாரத்தின் நொடிமுள் போல அயராமல் சுழல்கின்றனர்.

அதிகாலை நான்கு மணிக்குத் தொடங்கும் இன்றைய பெண்களின் உழைப்பு நள்ளிரவு வரை தொடர்கிறது. சிந்தித்துப்பார் இன்றைய பெண்களின் நிலையை... அலுவலகப்பணி... பின்னர் வீட்டில் பணி.... குடும்பத்தைப் பேணிக்காத்தல் அடுக்கடுக்காக எவ்வளவு பணிகள்? எல்லாவற்றையும் சமாளிப்பது கடினம் அல்லவா? எல்லாவற்றையும் சரியாகச் செய்வதோடு விளையாட்டு, கலைகள் என அனைத்துத் துறைகளிலும் தனக்கெனத் தனி இடத்தை நிலை நிறுத்தி வைத்துள்ளனர். விதையாக மண்ணில் விழுந்து மரமாக வளர்ந்து தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்குப் பயன் தருபவள் பெண்தானே...

இக்கருத்துக்களை எல்லாம் ஆண்டாள் பிரியதர்ஷினி அவர்களின் பேச்சு மூலம் நான் தெரிந்து கொண்டேன். அப்போதுதான் நம்மைப் பற்றிய சிந்தனை என் மனதுக்குள் எழுந்தது. நாம் சாதனைப் படைக்கும் பெண்களுக்கு மத்தியில் இன்னும் சிறு புள்ளியாகவே உள்ளோம். நாமும் ஏதேனும் ஒரு துறையில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் என்னுள் ஒரு விதையாக விழுந்துள்ளது. இந்த விதை வளர்ந்து விருட்சமாக வேண்டும்.

நான் மட்டுமின்றி நம்மைப் போன்ற இளந்தலைமுறைப் பெண்கள் எல்லோரும் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திப் பல்வேறு சாதனைகளைப் படைத்தல் வேண்டும். இன்று இந்த எண்ணத்தின் விதையை உனக்குள் விதைக்கின்றேன்...

மகளிர்தின வாழ்த்துகள்!! சாதனைகளுடன் நட்பைத் தொடர்வோம்!!

உன் அன்புத் தோழி
க. ரம்யபாரதி
மூன்றாமாண்டு இளங்கலைத் தமிழ்

## அ முதல் ஔ வரை இன்பம்

அன்னை மடி இன்பம்
ஆழ்ந்த அறிஞர் சொல் இன்பம்
இனிய செந்தமிழ் இன்பம்
ஈடில்லாக் கல்வி இன்பம்
உள்ளத்தில் உறுதி இன்பம்
ஊக்கம் தரும் உயர்சொல் இன்பம்
என்றைக்கும் முக்கனி இன்பம்
ஏற்றந்தரும் சிந்தனை இன்பம்
ஐயம் அகற்றுதல் இன்பம்
ஒழுக்கம் அதனிலும் இன்பம்
ஓயாத உழைப்பு இன்பம்
ஔவை சொல் இன்பம்

அ. இன்னாசியம்மாள்
இரண்டாமாண்டு நிர்வாகவியல்

## அன்பில் ஒருமடல்

மனதில் கனவுகள் பலகொண்டு
கணவரின் கைபிடித்துச் செல்வாய் என்று
உறவினர் வாழ்த்திட நின்றாய் இன்று
தோழிகள் அளித்திட்ட மலர்ப்பூச் செண்டு
மனதில் தோன்றும் நட்பைப் பிரியும்
தருவாய் இது என்று
உன் மனம் மகிழ்ந்திட எழுதினேன்
அன்புமடல் ஒன்று!

வே. சத்யா
முதலாமாண்டு வணிகவியல்

## என்னைச் செதுக்கிய தாயே...

எனக்கு இவ்வுலகைக் காட்டினாய்...
தன்னம்பிக்கையெனும் பாலை ஊட்டினாய்!

தியாகமெனும் விளக்கை ஏற்றினாய்...
என் வாழ்வை முன்னேற்றினாய்!

என் கனவை உன் கனவாய்ச் சுமந்தாய்...
நான் துவளும்போது தோள் தந்தாய்!

என் கண்ணாய் என் உயிராய்...
எனக்கு வழிகாட்டினாய்!

என்னோடு பயணம் செய்தாய்...
நன்னெறிகளைக் கற்றுக் கொடுத்தாய்!

உன் வாழ்வை எளிதாக்கி
என் நாட்களை இனிதாக்கினாய்!

என்னைச் செதுக்கிய தாயே...
என்றும் வேண்டும் நீயே!

ச.சாகித்யா
இரண்டாமாண்டு ஆங்கிலம்

## ஆழிப் பேரலை

களிப்பில் ஆழ்ந்தேன்
உன் முகம் கண்டு...
நீ என்னைத் தழுவ வருகிறாய்
எனக் காத்திருந்தேன்...

சலங்கை ஓசையோடு
துள்ளும் பாதங்களைத்
தழுவ வரும் உன்னைக்
கொஞ்சி விளையாட
ஆசையாய் வரவேற்றேன்...

உணரவில்லை அக்கணம்...
என்னோடு கொஞ்சி விளையாட வந்த
அழகிய அலைகள் அல்ல நீ...
என் அன்பை உன்னோடு பகிர
என்னையும் உன்னுள்
அழைத்துச் செல்ல வந்த
ஆழிப் பேரலை என்று!

உன் உண்மை முகம் கண்டு
உறைந்து போனேன் உன்னுள்!!

சசிபிரியா கோ.
முதலாமாண்டு தகவல் தொழில்நுட்ப மேலாண்மை

## இயற்கை

பார்க்கும் இடம் எல்லாம்
பசுமை நிறத்தைக் கொண்டாய் நீ...
கண்களுக்குக் குளிர்ச்சியும்
இதயத்திற்கு இன்பத்தையும் தந்தாய் நீ...
இறைவன் தந்த காவியப் பிள்ளை
கவிஞனின் கண்களில் ஓவியத்தலைவி நீ...
உயிரினங்களுக்குக் கிடைத்த
வாழ்வியல் அன்னை நீ...
சிறுசிறு துளிகளை ஒன்றாக்கி
மழையாகி மண்ணிற்கு வந்த புதல்வி நீ...
இன்பம் தரும் உன்னைக்
கண்மணிபோல் காப்போம்...
உயிருக்கும் மேலாக
சுவாசித்துப் போற்றுவோம்!!!

பா.அனுசியா
முதலாமாண்டு வணிகவியல்

# வாழ்வின் தேடல்

வாழ்வின் மகிழ்ச்சியைத் தேடினேன்
வரும் துயரமெல்லாம் மறக்க…
மழை மேகம் தேடினேன்
மணணின் வறட்சியைப் போக்க…
கண்ணீரைத் தேடினேன
ஏமாற்றத்தின் தடங்கள் அறிய்…

உறவுகளைத் தேடினேன்
துன்பம் மறந்துத் தூங்க…
பயிற்சியைத் தேடினேன
முயற்சி செய்து வெற்றி பெற…

தனிமையைத் தேடினேன்
தவத்தை மேற்கொள்ள…
அனுபவம் தேடினேன்
அர்த்தமான வாழ்வைப் புரிந்துகொள்ள…

முதுமையைத் தேடினேன்
உறவுகளைப் புரிந்துகொள்ள்…
வார்த்தைகளைத் தேடினேன
ஓர் கவிதை எழுத…

இ. யோகேஸ்வரி
உயிர் வேதியியல்

# மரபுக் கவிதை - வெண்பா

## பெண்ணென்னும் பேரொளி

சக்தியின் சாரமே அன்பின் உருவமே
வெற்றியின் ஊற்றிடமே வீரத்தின் வேரே
அறியாமை வீழ்த்திய ஆற்றல்சால் பெண்ணே
அறிவெனும் பேரொளி நீ!!

க. ரம்யபாரதி
மூன்றாமாண்டு இளங்கலைத்தமிழ்

## தங்க மங்கை

மங்கையாய்ச் சக்தியின் பிம்பமாய் வாழ்வினில்
தங்கமாய்ப் பிள்ளை கணவனை எங்கள்
குடும்பச் சுமையை உனக்குள் சுமந்தாய்
இடும்பை உனக்கிலை வாழ்!!

மா. ரூபிணி
மூன்றாமாண்டு இளங்கலைத்தமிழ்

# பொழுதுபோக்கில் பொசுங்கும் பொழுதுகள்!

காலம் மிக வேகமாக நம்மைக் கடந்து செல்கிறது. 2018ஆம் ஆண்டைக் கடந்து 2019ஆம் ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்துவிட்டோம். எத்தனைக் காலங்களைக் கடந்து வந்தாலும் மனிதனின் தேவையோ ஆசைகளோ பூர்த்தியாகவில்லை.

தொடக்கத்தில் மனிதன் தன் உழைப்பின் களைப்பைப் போக்கிக்கொள்ளவே பொழுதுபோக்கினைக் கையாள விரும்பினான். ஆனால் இன்றோ பொழுதுபோக்கே உழைப்பாக மாறிவிட்ட நிலையில்தான் காலம் அதிவேகமாகக் கரைந்துக் கொண்டுவருகிறது. தங்கள் வாழ்வினையே பொழுதுபோக்குகளில் தொலைத்து வருபவர்களாக இன்றைய இளைஞர்கள் காணப்படுகின்றனர்.

சமூக வலைத்தளங்களில் ஏராளமான பொழுதுபோக்கு அம்சங்கள் இருக்கின்றன. அவை மனிதர்களை எளிமையாகத் தன்பக்கம் ஈரத்துக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்த கருவியாக மிகத் தீவிரமாக வளர்ச்சியடைந்து வருகின்றன. பேஸ்புக், டிவிட்டர், வாட்ஸ்ஆ.்.ப், டிக் டாக் என்ற செயலிகள் பெருமளவில் இன்றைய இளைஞர்களைக் கவர்ந்துவிட்டது.

இவற்றின் ஈர்ப்பால் மனிதர்கள் உயிரைக்கூட அர்ப்பமாக எண்ணி வாழ்க்கையை இழந்து வருகின்றனர். நவீன கால இளைஞர்கள் டிக் டாக் போன்ற செயலிகளில் விதவிதமான வீடியோக்களைப் பதிவு செய்து வருகின்றனர். இளைஞர் ஒருவர், கழுத்தில் கத்தியை வைத்துக்கொண்டு, பாடலுக்கேற்ப நடித்தபோது, அவரது கழுத்தைக் கத்தி அறுத்த விபரீத நிகழ்வு அரங்கேறியுள்ளது.

“டிக் டாக்” மூலம் சாதி வெறியைத் தூண்டும் இளைஞர்கள் உருவாகிவிட்டனர். தேனி மாவட்டம் ஆண்டிப் பட்டி அருகே டிக் டாக் செயலி மூலம் சாதி வெறியைத் தூண்டிய இரண்டு இளைஞர்களில் ஒருவரைக் காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

டிக் டாக் செயலி சீன நிறுவனத்தைச் சேர்ந்தது. இந்தச் செயலியைப் பயன்படுத்தும்போது செல்போன் ஸ்கீரினில் ஆபாச வீடியோ குறித்த விளம்பரம் வருகிறது. அதைக் கிளிக் செய்து உள்ளே செல்பவர்களுக்குத் தொடர்ந்து ஆபாச வீடியோக்கள் அனுப்பப்படுகின்றன.

பாடலுக்கு ஏற்ப அசைவுகள் செய்வது மட்டும்தானே என்று ஆரம்பித்து, இளைஞர்களை மற்றொரு பாதைக்கு அழைத்துச் செல்கிறது டிக் டாக் செயலி. இதுகுறித்து மனநல மருத்துவர் தேவராஜ் கூறும்போது, “தன்னைப் பற்றி மற்றவர்கள் புகழ்ந்து பேச வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் தங்களைத் தாங்களே வீடியோ எடுத்து வெளியிடுகின்றனர். இதுபோன்ற நபர்கள் பொதுவாகவே தன்னம்பிக்கை இல்லாதவர்களாக இருப்பார்கள். இதுவே ஒருவகையான மனநலக் குறைபாடு” என்கிறார்.

பொழுதுபோக்கு என்பது சிறிது நேரம் களைப்பைப் போக்கிக் கொள்ள உதவ வேண்டுமே தவிர முழுப்பொழுதையும் கழிக்கச் செய்து வாழ்க்கையை அழிப்பதாக இருக்கக்கூடாது.

எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதில் நம்முடைய கவனமும் கட்டுப்படுத்தக் கூடிய ஆற்றலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். நம்மை நாம் கட்டுப்படுத்தும் ஆற்றலை வளர்த்துக்கொண்டாலே நம்மைச் சூழும் எந்தப் பிரச்சனைக்கும் நம்மால் தீர்வு காண முடியும். எனவே நம் சிந்தனைகளைச் சிறந்த முறையில் தூண்டக்கூடிய நல்ல பொழுதுபோக்குகளை மேற்கொள்ள வேண்டும்.

புத்தகங்கள் வாசிக்கும் பண்பினை வளர்த்துக்கொள்ள வேண்டும். நல்ல சிந்தனைகள் புத்தகங்கள் வாசிப்பதால் மிகுதியாகக் கிடைக்கின்றன. ஒரு நல்ல மனிதனைப் புத்தகம் உருவாக்கிவிடுகிறது. எனவே இதுபோன்ற நற்குணங்கள் நற்சிந்தைகளை வளர்ப்பதால் தன்னம்பிக்கை அதிகமாக வளருகிறது. தன்னம்பிக்கை இருந்தாலே பல தீர்வுகளைக் காண முடிகின்றது.

வீணாகக் கரைந்து கொண்டிருக்கும் காலத்தைப் பயனுள்ள பொழுதாக மாற்றத் தெளிந்த சிந்தையை உருவாக்குவோம்.

கு.பாரதி
இரண்டாமாண்டு முதுகலைத் தமிழ்

# கவியரங்கக் கவிதை

## பாரதி நாள் விழா

சோகா தமிழ்ப்பேரவையில் 11.12.2018 அன்று தமிழ்த்துறையில் கொண்டாடப்பட்ட பாரதி நாள் விழாவில் தமிழ்த்துறை மாணாக்கியரால் நடத்தப்பெற்ற கவியரங்கக் கவிதைகள் இன்று நற்றமிழ்க் குடில் இதழில்...

### பாரதியைக் கேட்கிறேன்

புதுமைத் தீ
அகிலத்தைப் புரட்டிய
புரட்சித் தீ

சக்திதாசா
ஆங்கிலேயனிடமிருந்து
எப்படி வெளிவந்தாய்?..

விடுதலைக்கு அர்த்தம்...
வேலைக்குச் செல்வது??
கல்லூரிக்குப் போவது??
விடுதலை என்னவென்றே
புரியாமல் போனதே!!??

சுப்பையா...
சாதியை மறுத்தாயே
ஏன் ஆவணக் கொலைகள்?

பெண் விடுதலைப் பாடியவனே
ஆண் கடிவாளம் எங்கே?
மானிடத்தை வளர்த்தெடுத்தவனே
நீ ஏன் ஆண்களை வளர்க்கவில்லை??

வரலாற்றில் வாழ்ந்தவனே
பெண்களின் ஏக்கத்தைப் புரிந்துகொள்!

மகளைத் தந்தைக்குள்ளேயே
புதைத்தது காமம்...
துண்டுத் துணுக்குகளாய்த்
தெறித்து விழுந்தாள் ஆசி.ஃ.பா...
திரட்டிச் சேர்க்க
முடியாமல் திணறினேன்!

ஆசி.ஃ.பாவும் ஸ்வாதியும்
உன் கவிதைகள் முன்
காத்திருக்கின்றனர்...
மீண்டும் நீ வந்து ஆண்களுக்குக்
கடிவாளம் இடவேண்டுமாம்!

இன்னொருபுறம்
காம வெறியர்களின் குளம்படியில்
நொறுங்கும் குழந்தைகள்!

இரவுகளில்
மென்று தின்றக் கழிவுகளாய்
நாறிக் கிடந்தார்கள் பெண்கள்...

பாரதி...
எனக்கு எப்போது கிடைக்கும்
உனது விடுதலை?

என்னோடு
நிறைவடையவில்லை பாரதி...
சிந்திக்க மேலும் பலர் உண்டு....

ஆ. ஹேமலதா
முதலாமாண்டு முதுகலைத்தமிழ்

# பாரதி கண்ட உலகம்

பாரதியே!
பாரத நாட்டில்
உன் கவிதையை அறியாத
பாமரனும் உண்டோ?

சுதந்திரத்தின் பெருமை
பார் எங்கும் வீசச்செய்த மகாகவியே!
அச்சமில்லை அச்சமில்லை என்று
அச்சமின்றிக் கவிதைகள் படைத்து
அருளிய பிதாவே!

தமிழ்மொழி போல் இனிமை
இல்லை என்ற உண்மையை
உலகறியச் செய்த பாரதியே...
நின் புகழ் வாழ்க!

எட்டுத் திசையும் பறந்து
காற்றில் விரைந்து சென்று
இரை தேடி வாழும்
சிட்டுக்குருவி போல்...
விடுதலை வேண்டும் என்று
விடுதலைத் தாகத்தை தூண்டியவரே!

காற்று அடித்துவர
பூந்தோட்டம் செய்து வைப்போம்...
காற்று வருகையில் நறுமணம் வீச
கற்பூரம் கொளுத்தி வைப்போம் என்று
காற்றின் தேவையை
உணர்த்திய பாரதியே!

பரந்து விரிந்த இவ்வுலகில்
பல கவிஞர்களின் படைப்பு இருப்பினும்....
பாரதியின் படைப்பே எடுத்துக்காட்டாய்!
வாழ்க தமிழ்மொழி!!!
வாழ்க பாரதி!!!
வெல்க பாரதி படைப்பு!!!

அ.ஸ்டெல்லாமேரி
இரண்டாமாண்டு இளங்கலைத்தமிழ்

# கனவு மெய்ப்பட வேண்டும்

விடுதலை பெற விரும்பிய வீரனே
பெற்றோம்! விடுதலை பெற்றோம்!!
புதுமைப் பெண் காண
விரும்பியத் தலைவனே
இழந்தோம்! பெண்மை இழந்தோம்!!

மையத்து நாடுகளில் பயிர் செய்ய
விரும்பிய மைந்தனே
அழித்தோம்! விளைநிலத்தை அழித்தோம்!!
குயிலின் ஓசையைக் கேட்க
விரும்பிய கவிஞனே! கேட்டோம்!
ஏழை உழவனின்
அழுகுரலைக் கேட்டோம்!!

கனவு மெய்ப்பட விரும்பிய புலவனே!!
உன் கனவு மெய்ப்பட
ஏழை பணக்காரன் என்ற
பாகுபாடு இல்லாத உலகம் வேண்டும்!!

காக்கை குருவி எங்கள் சாதி
உறவு கொண்டாடிய உத்தமனே!!
இனவேறுபாடு இல்லாத சமூகம் வேண்டும்!!
சுற்றும் காற்றில் சுதந்திரம்
வேண்டிய பாவலனே!!
அச்சம் இல்லாத வாழ்க்கை வேண்டும்!!

புதுமைப் பாவலனே!!
அனைத்து நாட்களும்
உன் பிறந்த நாளைப் பார்த்து
பொறாமைப்படுகின்றன...
இந்நாளில் பிறக்கவில்லையே என்று
இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்
என் உள்ளம் கவர்ந்த பாரதிக்கு....

சா. யோகேஸ்வரி
இளங்கலைத்தமிழ் முதலாமாண்டு

# கண்ணியம் காக்கும் பெண்ணியம்

*காலம் கருதி இருப்பர் கலங்காது*
*ஞாலம் கருது பவர்.*

என்ற வள்ளுவர் தந்த வாய்மொழிக்கேற்ப, பெண்மை எனும் சக்தி தனக்கென காலம் கருதிக் காத்திருந்து இன்று ஞாலத்தையே கட்டியாளுகின்றது. பெண்ணடிமை பேசியோர் எள்ளளவும் எண்ணியிருக்க மாட்டார் இவர்கள் இத்தகைய உச்ச வரம்பினை எட்டுவார்களென்று!

சூரிய ஒளி சுடுகிறது என்று கருதியிருப்பின் மரங்கள் எல்லாம் பூக்காமலே இருந்திருக்கும். விளைவு எதுவாயினும் எதிர்கொள்ளத் துணிந்தே களத்தில் இறங்கிய வீராங்கனைகள் சாதாரண சவால்கள் எனக் கூற இயலாத இன்னல்களை ஒரு நொடிக்கு இரண்டு என சமாளித்துக் கொண்டிருக்கின்றனர்.

பெண்களைக் கட்டுப்பாடு எனும் கயிற்றால் கட்டி, அது உன்னைக் காத்துக் கொள்ள உதவும் என்றும் கூறி, கொஞ்சம் கொஞ்சமாகப் அடிமை வலைக்குள் விழச்செய்தனர். ஆனால் இன்றைய மகளிர் தனக்கென ஓர் வரையறை வைத்துக்கொண்டு வாழ்வின் சூழ்ச்சி முடிச்சிகளை ஆராய்ந்து அவிழ்க்கத் தொடங்கியுள்ளனர்.

ஆணினம் விதிக்கும் அடக்குமுறைக்கும் ஆதிக்கத்திற்கும் அடங்குவதே பெண்ணினம் எனப் பேதமை சொல்லியே பதியவைத்து, நாம் படும் இன்னலையும் இன்பத்தையம் பிறர் தீர்மானிக்கச் சட்டமும் சலாம் அடித்த காலத்தின் சாயம் இன்று வெளுத்தது.

அந்நியன் சென்றாலும் அந்நிய மொழி அலாவுவது போல் ஆணாதிக்கம் அழிக்கப்பட்டாலும் தலைமறைவாய் அவ்வப்போது தலைகாட்டத்தான் செய்கிறது. உறவுகளின் ஊடே ஓரிரு முறை அவையும் அன்பெனும் பிணியால் அவளால் சகித்துக் கொள்ளப்படுகிறது.

சிறகு முளைத்த பறவை போல தனக்கு இயன்றதையும் இயலாததையும் இடைவிடாது உழைத்துப் பெற்று, அவற்றில் காலூன்றி, சார்ந்தோருக்கு ஊறு விளைவிக்காது சாதனைகளைச் சாத்தியமாக்கி வருகின்றனர் இன்றைய வீர மங்கைகள்!!

கண்ணியம் காக்கும் பெண்ணியம் வாழ்க! வளர்க!

வே. குணசேகரி
மூன்றாமாண்டு இளங்கலைத்தமிழ்

# அறிவோம் அறிஞர்களை



ராஜம் கிருஷ்ணன்... 1925ஆம் ஆண்டு தமிழகத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள முசிறியில் பிறந்தார். பள்ளிக்குச் சென்று முறையான கல்வி பயிலாதவர். பெண்கள் பூப்படையும் முன்பே திருமணம் செய்து வைத்துவிடும் அன்றைய சமூக வழக்கப்படி 15ஆவது வயதிலேயே அவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். திருமணத்திற்குப் பின்னர் சென்னை கிழக்குத் தாம்பரத்தில் குடியேறினார். மின்பொறியாளரான கணவரின் உதவியால் பல புத்தகங்களைப் படித்துப் பின் கதைகளை எழுத ஆரம்பித்தார்.

தமிழ் நாவல் உலகில் அவருக்குத் தனியிடம் உண்டு. பெண்களது வாழ்வை மிக நுணுக்கமாக எளிமையான தமிழ் நடையில் சித்தரித்துள்ளார். இவருடைய முதல் நாவல் ‘பெண்குரல்’ என்பதாகும். அவரது படைப்புகள் பரந்துபட்டவை... அவற்றுள் சில...

| | |
|---|---|
| கரிப்பு மணிகள் | முள்ளும் மலரும் |
| ஊசியும் உணர்வும் | வேருக்கு நீர் |
| குறிஞ்சித்தேன் | புதியதோர் உலகு செய்வோம் |
| பெண் விடுதலை | கோடுகளும் கோலங்களும் |

பெற்ற விருதுகள்

1. நியூயார்க் ஹெரால்ட் டிரிபியுன் சர்வதேச விருது
2. சாகித்திய அகாடமி விருது
3. சோவியத் நாடு நேரு விருது
4. திரு.வி.க விருது

ஆ. ஜான்சி
இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு



# நூல் அறிவோம்

நூலின் பெயர் : வனவாசம் வந்த தென்றல்
ஆசிரியர் : கீர்த்தி

பத்து சிறுகதைகளைக் கொண்ட இந்நூலினை மணிமேகலை பதிப்பகம் 2004 ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளது. வனவாசம் வந்த தென்றல் என்னும் நூல் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் புரியும் நடையில் படிப்பதற்கு ஆர்வம் கூட்ட வல்லதாக உள்ளது.

இந்த நூலின் ஒவ்வொரு சிறுகதையின் தொடக்கத்திலும் இயற்கைப் பற்றிய வருணனை அழகாக மனதைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. ஒரு இரவு நேரத்தில் இடி, மின்னலுடன் கூடிய மழையின் காட்சிகளை அழகான மொழிநடையில் நம் கண்முன்னே கொண்டு வந்துவிடுகிறார் நூலின் ஆசிரியர்.

ஒவ்வொரு சிறுகதையும் ஒவ்வொரு சூழ்நிலையை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது. வாசகர் அனைவரையும் கவர வேண்டும் என்ற எண்ணத்தோடு கவிஞர் கீர்த்தி தெளிவாக ஒவ்வொரு சிறுகதைகளையும் வெவ்வேறு பொருண்மையில் எழுதியுள்ளார்.

ஒருசில கதைகளில் உள்ள வாசகங்கள் படிப்பவர்களைக் கண்கலங்க வைக்குமாறு உணர்ச்சிப் பொங்கும் வகையில் அமைந்துள்ளன. இதிலுள்ள ‘போர்ப்பாசறை’ என்னும் கதையைப் படிக்கும்போது கவிஞர் கீர்த்தி எழுதியுள்ள உணர்ச்சி பொங்கும் மொழிநடையில் என்னை அறியாமலேயே என் கண்களின் ஓரத்தில் அரும்பும் கண்ணீர்த் துளிகளை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்த நூலின் முதல் கதை வனவாசம் வந்த தென்றல். இக்கதை வீட்டிக்குத் தெரியாமல் காதலித்துத் திருமணம் செய்துகொண்ட மல்லிகா, மாதவன் திருமணத்திற்குப் பின்னர் படும் இன்னல்களைக் காட்டுகிறது.

**தாய் தந்தையர் எத்தனையோ கனவுகளோடு தன் பிள்ளைகளை வளர்க்கிறார்கள். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் பிள்ளைகள் எடுக்கும் ஒரு தவறான முடிவினால் பெற்றோர்படும் அவலங்களைக் கூறும் இந்தக் கதை படிப்பவரின் மனதில் ஆழப் பதிந்துவிடுகிறது.**

இப்புத்தகத்தில் ஏனைய சிறுகதைகளையும் வாழ்கையின் சூழ்நிலைகளை மையமாக வைத்தே அமைத்திருக்கிறார் கவிஞர் கீர்த்தி. மொத்தத்தில் படிப்போரின் மனமாகிய வனத்தில் வாசம் வீசும் தென்றலாய் அமைகிறது இந்த வனவாசம் வந்த தென்றல்...

அ. பர்ஸானா
இரண்டாமாண்டு இளங்கலைத்தமிழ்

# சொல்லோடு விளையாடு..

இன்தமிழ்ச் சொல் நூறு.. இதில் ஒளிந்திருக்கும் சொல் கூறு!

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ப | மி | ற் | சி | தி | டு | வி | ன | க |
| மா | வி | கை | தொ | த் | வி | த | உ | ம் |
| ஆ | ண | தி | மா | ண | பு | த் | மு | ய |
| உ | சி | வ | லா | ம் | ண | ட் | ட் | க |
| தே | தொ | ரி | ரு | ப | வி | ருந் | மா | க |
| ர் | ன | ர | ய | பி | தெ | ய | ஆ | ழ் |
| வு | ம் | லி | மே | ர் | சி | க | ட் | வா |
| த | ணு | சி | ழா | மே | யா | த் | பு | மா |
| மா | ஞ | வு | ரு | சை | ண | ழா | த | ணா |

குறிப்பு

ஒளிந்திருக்கும் சொற்களைக் கண்டறிவோர் அடுத்த இதழுக்கு அவற்றைத் தரலாம். மிகுதியான சொற்களைத் தந்தவருடைய விடைகள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

வெ. வேதவள்ளி
நீ. வர்ஷினி உமையாள்
இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு

## விடைதேடும் விடுகதைகள்

1. கையை வை - என்ற சொல்லில் வரும் ஆறு எது?

விடை : வைகை.

2. எட்டு எட்டு சேர்ந்தால் 1000 எப்படி வரும்?

விடை : 888 + 88 + 8 + 8 .

3. பகலில் ஓடித் திரிவான், இரவில் ஓய்வெடுப்பான் அவன் யார்?

விடை : செருப்பு.

4. கண்ணுக்குத் தெரியாததை கணப்பொழுதில் காட்டிக் கொடுக்கும், அது என்ன?

விடை : பூதக்கண்ணாடி.

5 . வாயில்லாப் பறவை ஊர் ஊராய்ப் பறக்கும், அது என்ன ?

விடை : ஆகாய விமானம்

அ. உமா மகேஸ்வரி
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## சிறகு விரித்த பறவை

அமைதியான காலைப்பொழுது, பறவைகளின் சத்தம் எங்கும் ஒலிக்கிறது. ஊரில் அனைவரும் வேலைக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் பரபரப்பாக பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்தனர். திடீரென்று அழுகையின் சத்தம். ஊர் மக்கள் அனைவரும் அன்பு வீட்டை நோக்கி பதறியடித்து ஓடினர். அன்புவின் தந்தை இறந்துவிட்டார் என்ற செய்தி எல்லாருக்கும் அதிர்ச்சியைத் தந்தது. நேற்றுகூடப் பார்த்தேனே. நல்லாதான என்கிட்ட பேசிக்கிட்டு இருந்தார். திடீர்னு ஏன் இப்படி ஆச்சு?

ஐயோ! நல்ல மனுசன் இந்தப் பக்கத்தில் இருக்கற யாருக்காவது என்ன பிரச்சனைனாலும் முன்ன நின்னு உதவி செய்வார். இந்த மனுசனுக்கா இப்படி ஒரு முடிவு?

நம்பவே முடியலயே? இந்த ஒத்த மனுசனோட வருமானத்தைத்தான் இந்தக் குடும்பம் நம்பியிருந்தது. மூனு பொம்பளை புள்ளைங்கள வச்சிக்கிட்டு இந்த அம்மா இனி என்ன செய்யப்போறாங்களோ தெரியலயே...? என ஆளாளுக்குப் புலம்பிக் கொண்டிருந்தனர்.

அறிவுமதி, வளர்மதி, அன்புமதி மூவரையும் அணைத்தபடி யாரும் இல்லாத உலகில் தனித்து விடப்பட்டவளாய் அன்புவின் தாய் கமலம் கலக்கமடைந்தாள். கணவன் இறந்த பிறகு தன்னுடைய மூன்று பெண் குழந்தைகளையும் வளர்த்து ஆளாக்க என்ன செய்வது என்று அறியாமல் திகைத்து நின்றாள்.

கமலம் இயல்பிலேயே கொஞ்சம் நோஞ்சான். அவ்வப்போது உடலுக்கு ஏதாவது ஒன்று வந்து அவளைப் பாடாய்ப்படுத்தும். அன்புவின் அப்பா இருந்தவரை அவளுக்கு தன் உடல்நிலையைப் பற்றிக் கவலை இல்லாமல் இருந்தது. இப்போது அவள் தன் குழந்தைகளை வளர்ப்பதற்காக ஏதாவது ஒரு வேலைக்குப் போயே ஆகவேண்டும் என்ற

கட்டாயத்தில் இருந்தாள். ஆனால் அவளுக்கு நிரந்தரமான வேலை எதுவும் கிடைக்கவில்லை. அவ்வப்போது அவளுக்குக் கிடைத்த சிறுசிறு வேலைகளைச் செய்து குழந்தைகளின் அரைவயிற்றுக்கு மட்டுமே உணவளிக்க அவளால் முடிந்தது.

அம்மாவின் துன்பத்தை அறிந்துகொண்ட பிள்ளைகள் ஒருநாள்... ‘அம்மா நாங்களும் உங்களுடன் வேலைக்கு வருகிறோம்’ என்றனர். நான் உயிரோடு இருக்கும் வரை இந்த எண்ணம் உங்களுக்கு வரக்கூடாது. நான் எப்பாடுபட்டாவது உங்களைகளைக் காப்பாத்துவேன். நீங்க எல்லாம் நல்லாப் படிச்சி நல்ல நெலமைக்கு வந்தா எனக்கு அது போதும் என்று கூறிய கமலம், அன்றைய பொழுதைக் கழிப்பதற்கான வேலையைத் தேடிப் புறப்பட்டாள்.

கணவனைப் பிரிந்த சோகம், பிள்ளைகளைச் சரியாக கவனிக்க முடியாத வறுமை எல்லாம் சேர்ந்து மனதைக் குழப்ப கால் போனபோக்கில் நடந்துகொண்டிருந்த கமலம், எதிரில் வேகமாக வரும் லாரியைக் கவனிக்காமல் நடந்தாள். கண்மண் தெரியாமல் வேகமாய் வந்த லாரி கமலத்தின் மீது மோத, சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்து போனாள் அவள்.

திக்குத்தெரியாத காட்டில் விடப்பட்ட தாயைப் பிரிந்த மானைப் போல மூன்று பெண் குழந்தைகளும் தாயை இழந்துத் தவித்துக் கொண்டிருந்தனர். பெற்றோரை இழந்த நிலையில் உறவினர்கள் பார்த்துக்கொள்ள முடியாமல் அறிவுமதி, வளர்மதி ஆகிய இருவருக்கும் திருமணம் செய்ய முடிவெடுத்தனர். ஆனால் அறிவுமதியின் வயது 16. வளர்மதியின் வயது 14. இளம்வயதில் திருமணத்தை நடத்தி வைத்த உறவினர்கள் அப்பெண்களைப் பற்றிச் சிறிதும் கவலைபடாமல் அப்படியே விட்டுவிட்டனர்.

இருவருக்கும் இளையவளான அன்புக்கு வயது பத்து. தன்னுடைய சகோதரிகள் இருவருக்கும் திருமணம் முடிந்ததால் அன்பு தன் உறவினர் வீட்டில் வசித்து வந்தாள். பத்து வயதே ஆன அன்பு, அவர்கள் வீட்டில் கூலியில்லா வேலையாளாய் வாழ்ந்து வந்தாள். ஒரு வேளை சாப்பாடுகூட

அந்த வீட்டில் அவளுக்கு ஒழுங்காகக் கிடைத்ததில்லை. ஆனால் வீட்டில் உள்ள வேலைகள் அத்தனையும் அவள் தலையில் கட்டிவிட்டு அங்கிருந்தவர்கள் சொகுசாக வாழத் தொடங்கினர். அத்தனை வேலையையும் செய்து முடித்தால்தான் அவளுக்குச் சாப்பாடு கிடைக்கும். அப்படிக் கிடைக்கும் உணவுகூட அவர்கள் சாப்பிட்டு மிஞ்சியது... அவர்களுக்கு வேண்டாதது... என்பதாகத்தான் இருக்கும்.

இந்த வாழ்க்கை அன்புக்கு மிகவும் துன்பத்தைத் தந்தது. தன் அக்காக்களின் வீட்டிற்குச் சென்றாலாவது தன் வாழ்க்கை நிலையில் ஏதாவது மாற்றம் கிடைக்குமோ என்று ஏங்கினாள். ஆனால் அந்த வீட்டிலிருந்து எப்படிக் கிளம்புவது எனத் தெரியாமல் தவித்தாள். ஒருநாள் அவளுடைய மூத்த சகோதரியான அறிவு உறவினரின் வீட்டிற்கு வந்து அவளைத் தன்வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

அக்காவின் வீட்டிற்குச் சென்றதும் தன் வாழ்க்கையில் ஏதேனும் மாற்றம் ஏற்படும் என்று மகிழ்ச்சியோடு சென்ற அன்பிற்கு அங்கும் ஏமாற்றமே காத்திருந்தது. உறவினரின் வீட்டிலிருந்த வேலையைவிடப் பலமடங்கு வேலை அக்காவின் வீட்டில் அவளுக்காகக் காத்துக்கிடந்தது. அறிவு தன் தங்கையை எப்போதும் திட்டிக் கொண்டே இருப்பாள். அன்பு தன்னுடைய தங்கைதான் என்றுகூட பார்க்காமல் பாசமற்று நடந்துகொண்டாள். பற்றாக்குறைக்கு அறிவுமதியின் கிழட்டு மாமனார் வேறு அவளிடம் தவறான நோக்கத்தில் நடந்துகொள்ள முயற்சித்தார்.

இந்த நரகத்திலிருந்து எப்போதுத் தப்புவோம் என்று நினைத்த அன்பு ஒருநாள் அறிவுமதிக்குத் தெரியாமல் சின்ன அக்கா வளர்மதியின் வீட்டிற்குச் சென்றுவிட்டாள். வளர்மதியோ ஆதரவற்று வந்து நிற்கும் தன் தங்கையை ஏறெடுத்தும் பார்க்காமல், அவள் கையில் 50 ரூபாயைத் திணித்து, இனி இங்கே வராதே என்று சொல்லி அனுப்பிவிட்டாள். அக்காவிடம் பாசத்தை எதிர்பார்த்துச் சென்ற அன்புவின் இதயம் சுக்கு நூறாய் உடைந்தது. தாயும் தந்தையும் இழந்த நிலையில் தன் சகோதரிகள் இருவரும் தாயாக இருப்பார்கள் என்று எண்ணிய அன்புக்கு ஏமாற்றமே கிடைத்தது.

என்ன செய்வது? எங்கு செல்வது? என்று தெரியாமல் ரோட்டோரமாக நடந்துசென்ற அன்புவின் மனதில் ஏதேதோ எண்ணங்கள் ஓடின. இந்தத் துன்பமான வாழ்க்கையை வாழ்வதற்காக இந்த உயிரை வைத்துக்கொண்டு உயிரோடு இருப்பதைவிடத் தற்கொலை செய்து கொண்டு செத்துப்போவதே மேல் என்ற எண்ணம் அவளுக்குள் எழுந்தது. என்னைத் தவிக்கவிட்டு என் அம்மாவும் அப்பாவும் போய்விட்டார்கள். அவர்கள் போன இடத்திற்கே நானும் போகிறேன் என்று அன்பு தனக்குத் தானே புலம்பிக்கொண்டாள்.

சிறகொடிந்த பறவையாய், செல்லும் திசைதெரியாமல் நட்டநடு வீதியில் கண்ணீர் வழிய நின்றாள் அன்பு. அப்போது அந்த வழியாக வந்த முத்து என்ற 12 வயது நிரம்பிய சிறுமி ஒருத்தி அவள் அழுதுகொண்டிருப்பதைப் பார்த்து அவள் அருகில் வந்தாள். அந்தச் சிறுமி தன்னை நோக்கி வருவதைக்கூட உணராமல் அன்பு அழுதுகொண்டே இருந்தாள். அன்பிற்கு அருகில் வந்த சிறுமி அவளுடைய நிலைமையை விசாரித்து அறிந்து கொண்டாள், அன்புவின் துன்பத்தைத் தன்னுடைய துன்பமாக உணர்ந்தாள் அவள். அழாதே என்று அவளைச் சமாதனப்படுத்தித் தான் வசிக்கிற கருணை இல்லத்திற்கு அழைத்துச் சென்றாள். வருத்ததுடன் இருந்த தோழியை முத்து அன்னைபோல் அரவணைத்துக் கொண்டாள். இருவரும் தங்களுடைய இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்..

தன் உடன்பிறப்புகளிடம் இருந்து கிடைக்காத பாசம் அன்பிற்குத் தன் தோழியான முத்திடம் இருந்து கிடைத்தது. முத்துவிற்கும் அவள் குடும்பத்தினரிடமிருந்து கிடைக்காதப் பாசம் அன்பிடம் இருந்து கிடைத்தது. அதன்பின் முத்துவும் அன்புவும் இணைபிரியாத தோழிகளாய்ச் சிறகு முளைத்த பறவைகளாகத் தங்கள் வாழ்க்கையில் சிறகடித்துப் பறந்தனர்.

*அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்*
*புன்கணீர் பூசல் தரும்.*

மா. ரூபிணி,
மூன்றாமாண்டு தமிழ் இலக்கியம்.


# தூரிகைத் தூரல்கள்...













அன்று...
தொட்டில் குழந்தையாய்...

மா. ரூபிணி
இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு

இன்று...
அறிவுமிகு நங்கையாய்...
நற்றமிழ்க்குடில்!



மு.துர்கா
முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு



15 மற்றும் 16 பட்டமளிப்பு விழா - 27.02.2019



19 ஆம் ஆண்டு
கல்லூரி நாள் விழா



கல்லூரி மாணவியருக்கான
கலை விழா கலாக்ஷியா - 2019

# சோகா சாதனை மங்கையர்



திருமதி. கோகிலம் குமணன்
கல்லூரி செயலர்

ஆயிரமாயிரம்
பெண்களின் வாழ்வில்
கல்வி ஒளியேற்றிய
அழகிய அகல்விளக்கு!



**கு. பாரதி,** இளங்கலைத் தமிழில் பல்கலைக்கழக முதலிடம், பேராசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி, வானொலி நிகழ்ச்சித் தொகுப்பாளினி, கவிதைச் செல்வி, தமிழ்ச் சுடர் விருதுகள் பெற்றவர்.

**சி. ஹேமலதா,** வணிகவியல். குத்துச்சண்டை வீராங்கனை. மாவட்ட, மாநில, அளவில் குத்துச் சண்டைப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றவர். தேசியப் போட்டிகளில் பங்கேற்று வருகிறார்.





**இல. இராஜேஸ்வரி,** வணிகவியல். தேசிய மாணவர் படையின் சிறந்த மாணவி, ஜப்பானில் ஆறுமாதம் கல்வி பயின்று 2000யென் சிறப்புப் பரிசினை பெற்றவர்.

**ஆ. ஹேமலதா,** இளங்கலைத் தமிழில் பல்கலைக் கழக நான்காமிடம், தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறைப் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு 10000, கம்பன் கழகம், சேக்கிழார் ஆராய்ச்சி மையப் பேச்சுப் போட்டிகளில் பரிசு, நாடகச் செல்வி விருது பெற்றவர்.





**சு. விமலா,** ஆங்கில இலக்கியம். தடகள வீராங்கனை, பல்கலைக் கழக, மாநில, தேசிய அளவிலான வெங்கலம், வெள்ளிப் பதக்கங்களை வென்றவர்.